| | |
|---|---|
| | **பொள்ளாச்சி நகராட்சி**<br>**10.02.2021 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தில்**<br>**நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**<br>**தீர்மான எண். 2724** |

**2724)** பொள்ளாச்சி நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிமுன்னேற்ற அறிக்கையின்படி பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளில் இதுவரை 7308 ஆள் இறங்கு குழிகளும் 162.64 கி.மீ நீளத்திற்கு கழிவு நீர் சேகரிப்பு குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பாதாள சாக்கடை திட்டத்தில் குழாய்கள் பதிக்க சாலைகள் வெட்டப்பட்டு மேடும் பள்ளமாக உள்ளது. தற்போது வடகிழக்கு பருவமழை ஜனவரி வரை தீவிரமாக பெய்ததால், மழைநீர் தேங்கி சாலைகள் பழுதுபட்டு உள்ளது. இதனால் பாதசாரிகள் நடந்து செல்வதற்கும், போக்குவரத்திற்கும், வாகனங்கள் செல்வதற்கும் மிகவும் சிரமாக உள்ளது. பொதுமக்கள் பயன்பாட்டிற்கும், போக்குவரத்திற்கும் மிகவும் இடையூறாக இருப்பதால் அதனை உடனடியாக சரிசெய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளது.

பொதுமக்கள் மற்றும் வாகனஓட்டிகளின் நலன் கருதி , கீழ்காணும் வீதிகளில் தார்த்தளம் அமைக்க ரூ.300.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | வார்டு எண் | சாலையின் நீளம் கி.மீ | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | வடிவேல் கண்ணபிரான் நகர், லட்சுமி நகர் குறுக்கு வீதிகள், ராஜராஜன் வீதி, இளங்கோ வீதி, சடையப்ப கவுண்டர் லே அவுட், SRMS மில் வீதி இராமகிருஷ்ணாபுரம் மற்றும் அண்ணா நகர் மெயின் ரோடு நகராட்சி எல்லை வரை ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 08,09,14, 15 மற்றும் 34 | 2.27 | 147.00 |
| 2 | செல்வபுரம் மெயின் 1 மற்றும் 2–ம் வீதிகள், குறிஞ்சி நகர் குறுக்கு வீதிகள், தன்னாசியப்பன் கோவில் வீதி, கிருஷ்ணா கார்டன் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், NK நகர், ஈஸ்வரன் கோவில் முதல் பணிக்கம்பட்டி சாலை வரை, கண்ணப்பர் வீதி மற்றும் முத்துசாமி வீதி ஆகிய வீதிகளில் தார்த்தளம் அமைத்தல். | 07,31,34,35மற்றும் 36 | 2.56 | 153.00 |
| | **மொத்தம்** | | **4.83** | **300.00** |

**மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020-21-ம் (TURIP) நிதியில் முழு மான்யமாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.**